## தலைப்பு – 266 வவுனியா மாவட்டச் செயலகம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

வவுனியா மாவட்டச் செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வவுனியா மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 23 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

வவுனியா மாவட்டச் செயலகத்தின் நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைப் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்தவேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான உரிய மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டு மொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குரைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிதி செயலாற்றல் கூற்றில் மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்துதல் செலவினமாக ரூபா 8,667,539 செலவிடப்பட்டிருந்த போதும் அவை நிலையான சொத்துக்களாக மூலதனமயப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஒரு சொத்தின் பெறுமதி அதிகரிக்கக்கூடிய செலவினம் மட்டுமே நிலையான சொத்துடன் கூட்டப்படுகின்றது. அத்தோடு, ஆதனம், பொறி மற்றும் இயந்திர உபகரணங்கள் கூற்றில் மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் செலவுகளை சேர்ப்பதற்கு எதுவித அறிவித்தல்களும் வழங்கப்படவில்லை. | மூலதன வடிவிலான செலவினம் நிலையான சொத்துக்களாக காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒரு செலவின விடயத்திற்காக நிதி ஏற்பாட்டின் 100 சதவீதம் அவ்வாறெனில் ரூபா 100,000,000 சேமிக்கப்பட்டிருந்தது. | குறைநிரப்பு ஒதுக்கீட்டினூடாக ஏற்பாடு செய்யப்பட்ட இவ் ஒதுக்கீட்டுக்கான கோரிக்கை எம்மால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | தவறான குறிப்புக்கள் விரைவில் சீர் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தின் மீண்டுவரும் வடிவிலான பாதுகாப்புச் சேவைக்கட்டணம் மற்றும் மின்சாரக் கட்டணம் ரூபா 781,302 மாவட்டச் செயலகத்தினால் மூலதன செலவின விடயத்தினூடாக செலுத்தப்பட்டிருந்தது. | அமைச்சினால் மூலதன செலவு விடயம் ஒன்றின் கீழ் பாதுகாப்புச் சேவைக் கட்டணக் கொடுப்பனவிற்காக ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டிருந்தது. | சரியான செலவின விடயங்களின் கீழ் செலவுகள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்டச் செயலகம் மற்றும் திறைசேரியினால் தயாரிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் கூற்றுக்கள் இடையே ரூபா 33,138 தொகையான இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் காணப்பட்டன. | திறைசேரி அச்சுப்பதிவில் அந்த பெறுமதி இடம் பெறாமைக்கான காரணம் எம்மால் அறியமுடியாதுள்ளது. | திறைசேரி குறிப்புக்களுடன் இணக்கம் செய்து கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 17 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டிருந்த மீண்டெழும் மற்றும் மூலதன நிதி ஏற்பாடுகளில் 12 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சளவில் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | தாமதமாக நிதி ஏற்பாடுகள் கிடைத்தமை, தொற்று நோய் நிலைமை, கட்டுநிதி பற்றாக்குறை போன்ற காரணங்களினால் சேமிப்பு ஏற்பட்டது. | கிடைத்த நிதி ஏற்பாடுகளை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்த வேண்டும். |

### 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானதன் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கல் இடம்பெறுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியபோதிலும், அறிக்கையின் 3.4 பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாக்கள் மொழிபெயர்ப்பு செய்து பதில் பெற வேண்டியிருத்தல் மற்றும் ஒழுக்காற்று விசாரணை நடைபெற்று அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்ததாலும் பதில் அனுப்புவதில் காலதாமதம் ஏற்பட்டது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கடந்த 10 தொடக்கம் 12 வருடங்கள் தாமதமாயிருந்த 02 வாகன விபத்துக்கள் தொடர்பாக விசாரணை நடவடிக்கைகள் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதி 104க்கு அமைவாக இதுவரை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் அனுமதி கிடைத்ததும் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வவுனியா பிரதேச செயலகத்தினால் சௌபாக்கியா செயற்திட்டத்திற்காக நிதி ஒழுங்குவிதி 137 மற்றும் 138க்கு முரணாக 40 எண்ணிக்கையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கு முன்னர் 31 திசெம்பர் 2021 திகதி ரூபா 682,051 பெறுமதியான காசோலை வரையப்பட்டு அலுவலகத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. இது வரை அந்த பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு மற்றும் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ரூபா 682,051 பெறுமதியான காசோலை மாத்திரமே கையளிக்க வேண்டி உள்ளது என அறியத்தருகின்றேன். | உரிய காலத்தில் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கும், கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மாவட்டச் செயலகத்திற்கும் மற்றும் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கும் உரித்தான 17 அரச இல்லங்களை கடந்த 03 மாதங்கள் தொடக்கம் 05 வருடங்களுக்கு மேலாக பயன்பாடின்றி காணப்பட்டது. | திருத்தம் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு பற்றாக்குறை இதற்கு காரணமாகும். | சொத்துக்களினை பயன்பாடின்றி வைக்கப்படல் கூடாது. |
| (ஆ) வவுனியா பிரதேச செயலகம் மற்றும் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலகங்களுக்கு உரித்தான | வெங்கலச் செட்டிகுள அரச இல்லங்கள பயன்படுத்த முடியாத காரணத்தால் அகற்றுவதற்கு | பயன்படுத்த முடியாத சொத்துக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | உடைந்த நிலையில் காணப்பட்ட 02 அரச இல்லங்கள் தொடர்பில் கடந்த 05 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் 25 எண்ணிக்கையான வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் 02 தொடக்கம் 10 வருடங்களுக்கிடையிலான காலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமல் கைவிடப்பட்டுள்ளது. | வாகனங்களின் நிலைமையின் அடிப்படையில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு, ஏல விற்பனை செய்வதற்கும் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபைக்கு வழங்குவதற்கும் நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சொத்துக்களினை பயன்பாடின்றி வைக்கப்படல் கூடாது. |
| (ஈ) | 2018ஆம் வருடத்திலே ரூபா 16,093,613 செலவில் நிர்மானிக்கப்பட்ட ஓமந்தை கலாசார மத்தியநிலையம் 03 வருடத்திற்கு மேலாக பயன்பாடின்றி காணப்பட்டது. அத்தோடு, 2020 வருடத்திலே இந்த மத்தியநிலையத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட 349 எண்ணிக்கையான ரூபா 991,670 பெறுமதியுடைய பொருட்களும் ஒரு வருடத்திற்கு மேலாக பயன்பாடின்றியும் பாதுகாப்பற்ற நிலையிலும் காணப்பட்டது. | இந்த மத்தியநிலையத்திற்கு அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வீதம் நியமிப்பதற்கு கலாசார அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுக்காமை இதற்கு காரணமாயிருந்தது. | சொத்துக்களினை பயன்பாடின்றி வைக்காமலிருப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | சௌபாக்கியா செயற்திட்டத்தின் கீழ் 2021 வருடத்திலே கொள்வனவு செய்யப்பட்ட 103 எண்ணிக்கையான ரூபா 1,087,825 பெறுமதியான பொருட்கள் வவுனியா பிரதேச செயலகத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. | நிலையங்கள் இயங்கத் தொடங்கியதும் பொருட்கள் ஒப்படைக்கப்படும். | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட கூடாது என்பதுடன் நோக்கம் நிறைவேற்றுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வவுனியா பொருளாதார மத்திய நிலையம் இது வரையும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமை காரணமாக 2018 ஆம் ஆண்டிலிருந்து 2021 வருடம் வரை அதன் பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கை, நீர்க்கட்டணம் மற்றும் உபகரணங்களின் கொள்வனவுக்காக மாவட்டச் | இந் நிலையம் ஆரம்பமாகும் வரை உரிய முறையில் பராமரிக்கப்படாவிட்டால் அவற்றை பயன்படுத்த முடியாத நிலையை அடைந்துவிடும் என்பதனால் பராமரித்து பாதுகாப்பதற்கு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சொத்துக்களினை பயன்பாடின்றி வைக்கப்படல் கூடாது. |

செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 4,848,147 தொகை சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலாக காணப்பட்டது.

### 3.4 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளிக்காமல் இருந்த கால எல்லை 10 மாதங்களுக்கும் 15 மாதங்களுக்கும் இடைப்பட்ட வீச்சில் இருந்தது. | ஐயவினாக்களினை மொழிபெயர்ப்பு செய்து பதில் பெறுவதில் ஏற்பட்ட தாமதத்தினாலும், ஒழுக்காற்று விசாரணை நடைபெற்று அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்ததாலும் பதில் அனுப்புவதில் காலதாமதம் ஏற்பட்டது. | கணக்காய்வு ஐய வினாக்களுக்கு தாமதமின்றி பதில் அனுப்புதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வவுனியா மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான அரச இல்லங்களின் 01 மாதம் தொடக்கம் 10 வருடங்களுக்கிடையிலான காலப்பகுதியிலிருந்து காணப்படுகின்ற வாடகை நிலுவைகள் ரூபா 1,013,050 இனை அறவிட்டிருக்கவில்லை. | இதற்காக ஞாபகமூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. | உரிய காலப்பகுதிக்குள் வாடகை நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டியதுடன் தாபனக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | பயங்கரவாத விசாரணை பிரிவிற்கு 2011 ஆம் வருடத்தில் வழங்கப்பட்டிருந்த மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான அரச இல்லத்தின் குத்தகைக் காலம் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XIX இன் பிரிவு 6 இன் உப பிரிவு 6:1 இன் பிரகாரம் முடிவடைந்திருந்தது. இருப்பினும் அந்த இல்லம் மீளப் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் 2011 மே மாதத்திலுருந்து 31 திசெம்பர் 2021 வரைக்குமான ரூபா 307,200 நிலுவை வாடகையினை அறவிடுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த விடுதியை கையளிக்குமாறும் நிலுவைகளை சீர் செய்யுமாறும் கோரப்பட்ட போதிலும் குறித்த திணைக்களத்தினால் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. | தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நிலுவை வாடகைகளையும் அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஓய்வு பெற்ற பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவர் வாடகை செலுத்தாமல் அனுமதியின்றி 13 மாத காலங்களாக குறித்த அரச இல்லத்தில் வசித்துவருவதற்கு எதிராகமாவட்டச் செயலகத்தினால் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | குறித்த விடுதியை கையளிக்குமாறும் நிலுவைகளை சீர் செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | 2019 மார்ச் 27 ஆம் திகதிய 08/2019 இலக்க உள்நாட்டலுல்கள் சுற்றுநிருபம் மற்றும் 2008 யூன் 26 ஆம் திகதிய 13/2008 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு முரணாக 2021 ஆம் ஆண்டிற்கான மாவட்டச் செயலகத்தில் மற்றும் 02 பிரதேச செயலகங்களின் அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள உத்தியோகப்பூர்வ வாகனங்களுக்கான அனுமதிக்கப்பட்ட எரிபொருள் அளவினை விட 1366 லீற்றருக்காக ரூபா 148,999 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | உள்நாட்டலுவல்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சின் தேவையான அங்கீகாரத்திற்காக அறிவுரைகள் பெறப்பட்டு பின்னர் அதற்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் பதவியணியில் 68 ஆளணி வெற்றிடங்களும் 06 ஆளணி மிகைகளும் காணப்பட்டன. | நியமன அதிகாரம் மாவட்ட செயலாளருக்கு இல்லாத காரணத்தினால் ஆளணி வெற்றிடம் தொடர்பாக உரிய அமைச்சுக்களுக்கு தெரிவிக்கப்பட்டு அதன் பிரகாரம் புதிய நியமனங்கள், இடமாற்றங்கள் காலத்துக்கு காலம் வழங்கப்பட்டு வருகின்றது. | சேவையின் தேவைப்பாடுகளை கவனத்தில் கொண்டு ஆளனி வெற்றிடங்கள் மற்றும் ஆளனி மிகைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |